www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



வகுப்பு : 11

தேர்வு எண் X 1 1 3 0 4

# முதல் திருப்புதல் தேர்வு - ஜனவரி - 2025

நேரம் : 3.00 மணி] **தமிழ்** [மொத்த மதிப்பெண்கள் : 90

அறிவுரைகள் : 1. அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.
2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பு : விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

## பகுதி – I

குறிப்பு : அ) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 14X1=14

ஆ) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.

1. கருப்பட்டி, பனங்கற்கண்டு போன்றவை

1. மதிப்புக்கூட்டுப் பொருள்கள் 2. நேரடிப் பொருள்கள்

அ) 1–மட்டும் சரி ஆ) 2–மட்டும் சரி இ) இரண்டும் சரி ஈ) இரண்டும் தவறு

2. "உயிர்த்தெழும் காலத்துக்காக" – எனும் நூலின் ஆசிரியர்

அ) வால்ட் விட்மன் ஆ) இரசூல் கம்சதோவ்
இ) சு. வில்வரத்தினம் ஈ) ஆற்றூர் ரவிவர்மா

3. பொருத்துக.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| அ) | அடி அகரம் ஐ ஆதல் | – 1) | செங்கதிர் | அ) | 3 | 4 | 1 | 2 |
| ஆ) | முன் நின்ற மெய்திரிதல் | – 2) | பெருங்கொடை | ஆ) | 2 | 3 | 4 | 1 |
| இ) | ஆதிநீடல் | – 3) | பைங்கூழ் | இ) | 4 | 2 | 1 | 3 |
| ஈ) | இனமிகல் | – 4) | காரிருள் | ஈ) | 3 | 1 | 4 | 2 |

4. "காழ்வரை நில்லாக் கடுங்களிற்று ஒருத்தல்
யாழ்வரைத் தங்கி யாங்கு" – அடிகள் இடம்பெறும் நூல்

அ) புறநானூறு ஆ) கலித்தொகை இ) அகநானூறு ஈ) நற்றிணை

5. "சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு" – இக்குறட்பாவில் பயின்று வரும் அணி

அ) உவமையணி ஆ) உருவக அணி
இ) வேற்றுமை அணி ஈ) பிறிது மொழிதல் அணி

6. கூற்று 1 : 9 அடி சிற்றெல்லையும், 12 அடி பேரெல்லையும் கொண்ட நூல் – அகநானூறு
கூற்று 2 : தொல்காப்பியத்தில் உள்ள மொத்த இயக்கங்களின் எண்ணிக்கை – 27

அ) கூற்று 1, 2 சரி ஆ) கூற்று 1, 2 தவறு
இ) கூற்று 1 சரி 2 தவறு ஈ) கூற்று 1 தவறு 2 சரி

7. பொருந்தாததைக் கண்டறிக.

அ) இந்தியாவின் பெப்பிக – ஆனந்தரங்கர்
ஆ) சின்னச்சீறா – உமறுப்புலவர்
இ) நெடுந்தொகை – அகநானூறு
ஈ) சாகித்திய அகாதெமி விருது – வானம் வசப்படும்

Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



8. "GAZETTE, CONSUMER" - கலைச்சொல்லாக்கம் தருக.

அ) நூலகம், உற்பத்தியாளர் ஆ) உச்சவரம்பு, வாடிக்கையாளர்

இ) அனுப்புகை, விற்பனையாளர் ஈ) அரசு இதழ், நுகர்வோர்

9. "யாரே உனைப்போல் அனுதினம் உழைப்போர்?" – இது எவர் மொழி?

அ) சுந்தர முனிவர் ஆ) நடராசன் இ) மனோன்மணி ஈ) வாய்க்கால்

10. "சாதல் எனில் இருவருமே சாதல் வேண்டும்,
தவிர்வதெனில் இருவருமே தவிர்தல் வேண்டும்" – இஃது யார் யாரிடம் கூறியது?

அ) உதாரன் – அரசனிடம் ஆ) அமுதவல்லி – உதாரனிடம்

இ) உதாரன் – அமுதவல்லியிடம் ஈ) அமுதவல்லி – அமைச்சரிடம்

11. ஆக்கப் பெயர் விகுதி பெறா சொல்லைத் தேர்க.

அ) காவலாளி ஆ) மேலாளர் இ) உதவியாள் ஈ) ஆசிரியர்

12. அணிந்தேன் – சரியான பகுபத உறுப்பிலக்கணப் பிரிப்பு முறை

அ) அணி + த் + த் + ஏன் ஆ) அணி + ந் + த் + ஏன்

இ) அணி + த்(ந்) + த் + ஏன் ஈ) அணி + த் + த்(ந்) + ஏன்

13. "குயில்" என்னும் இலக்கிய இதழை நடத்தியவர்

அ) பாரதியார் ஆ) பாரதிதாசன் இ) அப்துல் ரகுமான் ஈ) இன்குலாப்

14. "அம்ம வாழி தோழி" – என்றும் குறுந்தொகை பாடலில் இடம்பெறும் திணை

அ) குறிஞ்சி ஆ) முல்லை இ) மருதம் ஈ) நெய்தல்

## பகுதி – II

### பிரிவு–1

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக. 3x2=6

15. வளருங் காவில் முகில்தொகை ஏறும் – பொன்
மாடம் எங்கும் அகிற்புகை நாறும் – அடிக்கோடிட்ட தொடர் குறிப்பிடுவது என்ன?

16. மருந்து எது? மருந்து மரமாக இருப்பவர் யார்?

17. செந்துறைப் பாடாண்பாட்டு – துறை விளக்கம் எழுதுக.

18. ஒழுக்கமும் பொறையும் உனைப்போல் யார்க்குள – இவ்வடி எதனைக் குறிப்பிடுகிறது?

### பிரிவு–2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக. 2x2=4

19. "கோட்டை" என்னும் சொல் திராவிட மொழிகளில் எவ்வாறு எடுத்தாளப்பட்டுள்ளது?

20. சங்ககாலத்தில் தமிழ் மொழியின் நிலை பற்றி இராசமாணிக்கனாரின் கூற்று யாது?

21. ஒலோகமாதேவீச்சரம் கோவில் கல்வெட்டில் காணலாகும் பெண் அதிகாரிகளின் பெயர்களிலிருந்து நீங்கள் அறிவது யாது?

### பிரிவு–3

எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடை தருக. 7x2=14

22. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.

அ) அலர்ந்து ஆ) ஏகுமின்

23. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.

அ) திருப்புகழ் ஆ) நீரோடை

24. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.

அ) காலத்துக்கேத்த மாரிப் புதுசுபுதுசா மொழி வடிவத்த மாத்தனும்.

ஆ) தேர்வெழுத வேகமாப் போங்க, நேரங்கழிச்சி போனாப் பதட்டமாயிரும்.

Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



25.மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.

உலை, உளை, உழை

26.வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.

அ) கல்வி கேள்விகளில் சிறந்தவர் நன்மைத் தீமைகளை புரிந்து பேசுவர்.

ஆ) தமிழர் ஆற்று தண்ணீரை தேக்கி சேமித்து கால்வாய் வெட்டிப் பாசனம் செய்தனர்.

27.சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க.

பிண்ணாக்கு

28.பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்க் கலைச்சொற்களை எழுதுக.

அ) **Multiple Personality** ஆ) **Earthworm**

29.மரபுச் சொல்லைத் தொடரில் அமைத்து எழுதுக. நிறைகுடம்

30.ஈரசைச் சீர்களுக்கு வழங்கப்படும் வேறு பெயர்கள் யாவை?

## பகுதி – III

### பிரிவு–1

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக. 2x4=8

31. நன்னூல் – நூற்குறிப்பு வரைக.

32.இவ்வுலகம் இன்றும் இயங்கிக் கொண்டிருப்பதற்கான காரணமாகக் கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி கூறும் கருத்துக்களை எழுதுக.

33.மேகத்திடம் கூறுவதுபோலத் தோழி தலைவனுக்கு உணர்த்திய இறைச்சிப் பொருள் யாது?

34.சேரநாடு செல்வவளம் மிக்கது என்ற கூற்றிற்குரிய காரணங்களைக் குறிப்பிடுக.

### பிரிவு–2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக. 2x4=8

35.பனைமரம் ஏழைகளின் கற்பக விருட்சம் – விளக்குக.

36.சமணப் பள்ளிகளும் பெண்கல்வியும் – குறிப்பு வரைக.

37."கோவில் என்பது வெறும் வழிபடும் தளம் மட்டுமன்று" – விளக்குக.

38.நாட்டுப்புறத்திலும், பட்டிணத்திலும், ஐரோப்பாவிலும் சிறந்து விளங்குவதாகத் தாகூர் எவற்றைக் கூறுகிறார்?

### பிரிவு–3

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக. 3x4=12

39.தமிழாக்கம் தருக.

1. Winners don't do different things, they do things differently.
2. Education is the most powerful weapon, which you can use to change the world.
3. Look deep into nature and then you will understand everything better.
4. Rords were made for journeys not destinations.

காது கேளாத மாணவர்களுக்கான மாற்று வினா

கீழ்வரும் பத்தியைப் படித்துணர்ந்து வினாக்களுக்கு ஏற்ற விடை தருக.

மனோன்மணியம் தமிழின் முதல் பா வடிவ நாடக நூலாகும். லிட்டன் பிரபு எழுதிய இரகசிய வழி என்ற நூலைத்தழுவி 1891 இல் பேராசிரியர் சுந்தரனார் இதைத் தமிழில் எழுதியுள்ளார். இந்நூல் எளிய நடையில் ஆசிரியப்பாவால் அமைந்தது. இஃது 5 அங்கங்களையும், 20 களங்களையும் கொண்டது. நூலின் தொடக்கத்தில் கடவுள் வாழ்த்துடன் தமிழ்த்தாய் வாழ்த்தும் இடம்பெற்றுள்ளது. மனோன்மணியத்தில் உள்ள கிளைக்கதை 'சிவகாமியின் சரிதம்' ஆகும். "நீராருங் கடலுடுத்த" – என்னும் தமிழகத்தின் தமிழ்த்தாய்வாழ்த்துப் பாடல் இடம்பெறும் நூல் மனோன்மணியம் ஆகும்.

Scanned with CamScanner

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



வினாக்கள்:

1. தமிழின் முதல் பாவடிவ நூல் எது?
2. மனோன்மணீயத்தில் உள்ள கிளைக்கதை என்ன?
3. மனோன்மணீயத்தில் இடம்பெறும் அங்கங்கள், களங்கள் எத்தனை?
4. மனோன்மணீயம் – எந்த நூலைத் தழுவி, எந்த ஆண்டில் எழுதப்பட்டது?

40. சொல்பொருள் பின்வருநிலையணி (அல்லது) உருவக அணியைச் சான்றுடன் விளக்குக.

41. உள்ளுறை உவமை, இறைச்சி எடுத்துக்காட்டுடன் விளக்குக.

42. இலக்கிய நயம் பாராட்டுக.

பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் – புவி
பேணி வளர்த்திடும் ஈசன்;
மண்ணுக்குள்ளே சிலமூடர் – நல்ல
மாதர் அறிவைக் கெடுத்தார்
கண்கள் இரண்டினில் ஒன்றைக் – குத்தி
காட்சி கெடுத்திட லாமோ?
பெண்கள் அறிவை வளர்த்தால் – வையம்
பேதமை அற்றிடும் காணீர்!

– *பாரதியார்*

43. முல்லைத்திணை (அல்லது) பாலைத் திணையைச் சான்றுடன் விளக்குக.

## பகுதி – IV

பின்வரும் வினாக்களுக்கு இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக. 3x6=18

44. அ) திருமலை முருகன் பள்ளு கூறும் வடகரை, தென்கரை நாட்டுப் பாடல்கள் வழி இயற்கை வளங்களை விவரிக்க.

(அல்லது)

ஆ) நடராசன் தனிமொழிகளிலிருந்து நீங்கள் அறியும் கருத்துகளை எழுதுக.

45. அ) நீங்கள் மொழியை வெளிப்படுத்தும் நிலையில் பேச்சுமொழியையும் எழுத்து மொழியையும். எவ்வாறு உணர்கிறீர்கள் என்பதை விவரிக்க.

(அல்லது)

ஆ) "கல்லும் கதை சொல்லும்" – என்னும் தொடர் தஞ்சைப் பெரிய கோவிலுக்குப் பொருந்துவதை விளக்கி எழுதுக.

46. (அ) வாடிவாசல் கதை வாயிலாக நீங்கள் உணர்ந்த கருத்துகளை விளக்குக.

(அல்லது)

ஆ) பிம்பம் கதையின் வாயிலாகப் பிரபஞ்சன் தெளிவுபடுத்தும் மனித முகங்களைப் பற்றி விவரிக்க.

## பகுதி – V

அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக: 4+2=6

47. அ) "அம்ம வாழி ........" எனத் தொடங்கும் குறுந்தொகைப் பாடலை எழுதுக.

ஆ) '....... யான்' - என முடியும் குறளை எழுதுக.

Scanned with CamScanner

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com